பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 07 ஞாயிற்றுக்கிழமை 23.11.2025 கதிர் 015

## இது ரகசியம் அல்ல!

ஆர்ப்பாட்டங்கள்,ஆளும்தரப்புக்கு எதிரான போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் என்பவற்றின் மூலம் மக்களின் நம்பிக்கையைப் பெற்று ஒரு கிளர்ச்சிப் ☞2

# கண்டியில் மண்சரிவு 6 பேர் பரிதாபச் சாவு

### 6 மணி நேரத்தின் பின் பெண் ஒருவர் உயிருடன் மீட்பு



கேகாலை-பஹலகடுகண்ணாவ பிரதேசத்தில், கனேதென்ன சந்திக்கு அருகில் வீடு மற்றும் கடையொன்றின் மீது பெரும் கல்லுடன் மண்மேடு சரிந்து விழுந்ததில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். நேற்று காலை 8.30 - 9 மணிக்கிடையில் இந்த மண்சரிவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்று சிறிது நேரத்துக்குள் மூவர் மீட்கப்பட்டு மாவனல்லை வைத்தியசாலையில் ☞2

## இனவாதத்திற்குள் சிக்காதிருக்க ஆளும்தரப்புக்கு ஆதரவு தருக

### அரசுத் தலைவர் தமிழ், முஸ்லிம் எம்.பிக்களுக்கு அழைப்பு

நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்க தமிழ், முஸ்லிம் கட்சித் தலைவர்களுக்கு அரசுத்தலைவர் அநுரகுமார அழைப்பு விடுத்துள்ளார்.

அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களையும் மதித்து, இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரும் சுதந்திரமாக வாழும் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், நமது நாடு எந்தவொரு இனவாத வலையிலும் சிக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் வலியுறுத்திய அரசுத் தலைவர், அதற்காக ஆளும்தரப்பு முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த ஆண்டு டிசம்பரில் நடைபெறவிருக்கும் 'இலங்கை தினம்' தொடர்பில் தற்போது திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் குறித்து எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தல் மற்றும் அவர்களின் கருத்துகள், பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதல் என்ற நோக்கத்துடன் நேற்று பிற்பகல் அரசுத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே அநுரகுமார இதனைத் தெரிவித்தார்.

சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்கும் தொலைநோக்குப் ☞2

## கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு முறையற்ற நியமனத்திற்கு முயற்சி

### அரசுத் தலைவர் மீது தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு

நாட்டில் நாளை முதல் (இன்று) தலைமை கணக்காய்வாளர் நாயகம் பதவி வறிதாக்கப்படும். அரச நிர்வாக சேவையில் அனுபவமற்ற தனது பல்கலைக்கழக நண்பரை கணக்காய்வாளராக நியமிக்க அரசுத் தலைவர் முயற்சிக்கிறார். இந்த முறையற்ற செயற்பாட்டை அரசுத் தலைவர் ☞2

## மாவீரர் கனவினை நனவாக்கக்கூடிய தீர்வையே அநுரவிடம் கேட்கிறோம்

### பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வில் சுமந்திரன் தெரிவிப்பு

ஒரு காலத்தில் நாட்டின் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு வீதி வீதியாக ரயர்கள் போட்டு எரிக்கப்பட்ட தங்களுடைய சகாக்களை நினைவுகூருகின்ற இன்றைய அரசுத் தலைவரிடமே அதிகாரப் பகிர்வைக் கேட்கின்றோம், அந்த நேரத்தில் அடக்குமுறையை




மேற்கொண்டவர்களிடம் கேட்கவில்லை, அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் நாம் கேட்கின்றோம், இந்த நாட்டில் அனைவரும் சமன் என நீங்கள் சொல்கின்றமை உண்மையாக இருக்குமாக இருந்தால் உங்கள் சகாக்களை ☞6

### மாகாண சபைக்கு அதிகாரத்தை வழக்காது புறக்கணித்து

## மத்திய அரசே சிறந்தது என்கிற நிலையை தமிழரிடம் ஏற்படுத்த ஆளும்தரப்பு முயற்சி

### கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அல்லது மாகாண சபை அமைப்பை தேசிய மோதலுக்கு ஒரு அர்த்தமுள்ள அரசியல் தீர்வாக நாங்கள் அங்கீகரிக்கவில்லை. ஆனால், மாகாண சபைகளுக்கான அதிகார வழங்கலை தொடர்ந்து புறக்கணித்து மத்திய ஆளும்தரப்பு சிறந்தது என்ற நிலைப்பாட்டை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் ஏற்படுத்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறதென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் நேரடி விளைவாக, அரசமைப்பு ரீதியாக கட்டளையிடப்பட்ட நிர்வாகப் பிரதிநிதித்துவத்திற்கான வரையறுக்கப்பட்ட கட்டமைப்பாக நாங்கள் அதை கண்டிப்பாகக் கருதுகிறோம். அங்கு இந்தியா பின்னர் ஓரங்கட்டப்பட்டது மற்றும் தமிழர் ☞6

## ரணில் -சஜித் இணைவுக்காக பலிக்கடா ஆகுவதற்கு தயார்

### ஹரின் பெர்னான்டோ அறிவிப்பு

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் இந்தப் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர முடியாது என்பது நுகேகொடை கூட்டத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும். ரணில் – சஜித் இணைவதற்கு நான் தடையாக இருக்கின்றேன் என்று எவரேனும் கருதினால் அதற்காக பலி கடா ஆவதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். ☞6

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அநுரவிடம் 3 கோரிக்கைகள் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் அரசுத் தலைவர் அநுரகுமாரவுடனான சந்திப்பில், கத்தோலிக்க திருச்சபை 3 பிரதான காரணிகளை வலியுறுத்தியுள்ளது. அதற்கமைய அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை விரைவில் மக்கள் மயப்படுத்தப்படும் என்றும், அதன் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தாம் எதிர்பார்க்கிறார்கள் என்று கத்தோலிக்க திருச்சபையின் ☞2

## வைத்தியர்களைத் தக்கவைக்க உடனடி நடவடிக்கை அவசியம்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

வைத்தியர்கள் உள்ளிட்ட உயர் திறனுடையவர்கள் நாட்டைவிட்டு செல்லும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களை தடுத்து நாட்டில் தக்கவைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கத் தவறினால், யார் ஆட்சி செய்தாலும் நாட்டை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

போராட்டத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு பதவிக்கு வந்ததுதான் இன்றைய தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு. அதனால்தானோ என்னவோ போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்களைக் கண்டு அது பெரியளவில் அஞ்சுகின்றது போன்று தெரிகிறது.

எதிர்க் கட்சிகளின் கூட்டுப் பேரணி மிகப் பெரிய அளவிலான சனத் திரளுடன் நடந்தது என்று சொல்ல முடியாது. முன்னர் ஜேவிபி மே தினக் கூட்டங்களுக்குத் திரட்டும் மக்கள் எண்ணிக்கைகூட எதிர்க் கட்சிகளின் கூட்டத்திற்குத் திரண்டதாகக் கூறிவிடமுடியாது. அப்படியிருந்தும், உயர்தரப் பரீட்சையைக் காரணம் காட்டி அந்தக் கூட்டத்திற்காகக் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கிகள் அனைத்தையும் கூட்டத்திற்கு முன்பாகவே பொலிஸார் அகற்றியுள்ளனர். பின்னர் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோதும் நாமல் பேசி முடித்த நிலையில் ஒரு மணி நேரத்திற்கு அந்தப் பகுதியில் முற்றாக மின்சாரம் தடைப்பட்டிருந்தது.

எதிர்க் கட்சிகளின் கூட்டத்திற்கு எதிரான இத்தகைய அடக்குமுறைகளைப் பார்க்கும்போது தமக்கு எதிராக ஒரு மக்கள் எழுச்சி ஏற்பட்டுவிடக்கூடாது என்று தேசிய மக்கள்சக்தி அஞ்சுவது அப்பட்டமாகத் தெரிகிறது. நுகேகொடை கூட்டம் ஒரு மக்கள் எழுச்சியின் அறிகுறியில்லை. அது, தேர்தல்களில் மிக மிக மோசமான தோல்வியைச் சந்தித்த எதிர்க் கட்சிகள் சில ஒன்றிணைந்து மீண்டும் தலையெடுப்பதற்கான தொடக்கம் மட்டுமே, அதைப் பார்த்தே ஆளும்தரப்பு இந்தளவிற்கு அஞ்சுமானால், ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் இயல்பாகவே மக்கள் மத்தியிலிருந்து எழக்கூடிய ஆளும்தரப்பு எதிரான எதிர்ப்புணர்வை அது எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பதை நினைக்கவே அச்சம் ஏற்படுகின்றது. அடக்குமுறைக்கு உள்ளானவர்கள், அதன் பாதிப்பை உணர்ந்து அடக்குமுறையைக் கையில் எடுக்காமல் இருப்பதே சிறந்த ஆட்சிமுறை. அதற்கு மாறாக அவர்கள் அடக்குமுறையை தமது ஆயுதமாக்கினார்கள் என்றால் அது பேரழிவையே ஏற்படுத்தும்.

.............................................

நுகேகொடை எதிர்ப்புக் கூட்டணியில் கலந்துகொண்ட கட்சிகளில் மக்கள் ஆதரவைப் பெருமளவில் கொண்டிருந்த கட்சிகளின் எண்ணிக்கை குறைவு. ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி என்பனவும் இந்தக் கூட்டத்தில் இணைந்திருந்தன என்றாலும் அவற்றின் மக்களாதரவு இப்போது அதளபாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இப்போதைக்கு மக்களாதரவை மீட்டெடுக்கும் வல்லமையுடன் இருக்கும் ஒரே கட்சி ராஜபக்சக்களின் பொது ஜன பெரமுனதான். அதனால் நாமல் ராஜபக்சதான் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை முன்னின்று கவனித்தார். கணிசமான அளவிற்காகவது மக்களைத் திரட்டியதிலும் அவரது பணியே முதன்மையானது.

இந்தப் பின்னணியில் ராஜபக்சக்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியிருக்கிறது ஆளும்தரப்பு. ராஜபக்சக்கள் ஆட்சியிலிருக்கும்போது சட்டத்திற்குப் புறம்பாகச் சேர்த்த சொத்துக்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில், குறிப்பாக லண்டன் மற்றும் அமெரிக்காவில் உள்ள ராஜபக்சக்களின் பணம் மற்றும் சொத்துக்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் வெகு தீவிரமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்ட அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டு மீது விசாரணை நடத்த சிஐடியினர் லண்டன் சென்றனர் என்ற செய்தி அண்மையில் வெளியாகி இருந்தது. இந்த விசாரணைக்காகச் சென்றதாகக் கூறப்படும் 7 பேர் கொண்ட சிஐடி குழுவினர் அந்தப் பணிக்காக மட்டும் அங்கு செல்லவில்லை என்றும் லண்டனில் வங்கிக் கணக்கொன்றை வைத்திருந்த இலங்கையின் முக்கிய புள்ளி ஒருவரின் நிதிப் பரிமாற்றங்கள் குறித்து விசாரிப்பதும் நாமலின் சட்டப் பட்டம் பற்றி சர்ச்சை குறித்து விசாரிப்பதும் அந்தக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த பணிகள் என்று கூறப்படுகின்றது.

இந்த சிஐடி குழு மிக இரகசியமாகவே லண்டன் சென்றிருந்தது. எனினும் அது பிரிட்டனுக்கான இலங்கை உயராணையரிடம் ஒரு வாக்குமூலத்தைப் பதிவு செய்யவேண்டியிருந்தது. ரணிலின் லண்டன் பயணத்தைக் குறித்த வாக்குமூலம் அது. இந்த வாக்குமூலத்தை வழங்குவதற்காக உயராணையரை கொழும்புக்கு வருமாறு பல தடவைகள் சிஐடியால் அழைப்பு அனுப்பப்பட்டபோதும் அவர் வருகை தரவில்லை. அதற்குப் பதிலாக சட்டத்தரணி ஒருவர் மூலமாகத் தனது வாக்குமூலத்தைப் பதிவு செய்து அனுப்பியிருந்தார். பிரிட்டனைச் சேர்ந்த ஒருவரை மணம்முடித்துள்ளார் என்று கூறப்படும் அந்த உயராணையர், இரண்டு வருட கால விடுப்பில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில்தான் அவரிடம் நேரடியாக வாக்குமூலம் பதிவு செய்வதற்காக சிஐடி குழு லண்டன் சென்றது. அப்படித் தாங்கள் வருவது குறித்து உயராணையருக்கும் அந்தக் குழு தகவல் தெரிவித்திருந்தது.

அந்தத் தகவல் உடனடியாக ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பகிரப்பட்டதன் அடிப்படையில் அவரது சட்டத்தரணிகள் அது குறித்து சிஐடியிடமும் சட்டமா அதிபரிடமும் விசாரிக்கச் சென்றதன் விளைவாகவே இந்த விவகாரம் ஊடகங்களுக்குக் கசிந்தது. இப்படி ரணில் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்கச் சென்ற குழு தனியே அந்தப் பணியை மட்டுமல்லாது வேறு பல முக்கிய பணிகளையும் மேற்கொண்டுவிட்டே நாடு திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டனர். அதன் பின்னர் சுமார் 6 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட தீவிர மீட்பு நடவடிகைகளின் பின்னர் மாலை 3 மணியளவில் பெண்ணொருவர் உயிருடன் மீட்கப்பட்டு உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

தொடர்ந்து மாலை 5 மணியளவில் மேலும் மூவர் சடலங்களாக மீட்கப்பட்டனர். அதன்படி, நேற்று மாலை வரை இந்த சம்பவத்தில் மூன்று ஆண்களும் ஒரு பெண்ணும் உயிரிழந்துள்ளதுடன், குறைந்தது நான்கு பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், சிலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என்ற தகவல்களின் அடிப்படையில் இராணுவம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய மீட்பு குழு மற்றும் தீயணைப்பு பிரிவின் மீட்புகுழு என்பவற்றுடன் பிரதேச மக்களும் மீட்பு பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நால்வரில் ஒருவர் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். வீதியோரக் கடை மற்றும் அதற்கருகில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மீது மண் சரிந்து விழுந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக கொழும்பு - கண்டி பிரதான வீதியூடான போக்குவரத்து பல மணித்தியாலங்களுக்குப் பாதிக்கப்பட்டது.

தற்காலிகமாக அந்த வீதியை மூடுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்ததோடு, சாரதிகள் மாற்றுவழிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டனர். பின்னர் அவ்வீதியில் ஒரு வழியூடான போக்குவரத்துக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டது.

'இந்த பிரதேசத்தில் 97 - 99 கிலோ மீற்றர் வரையான பிரதேசங்கள் மண்சரிவு அபாய எச்சரிக்கை மிக்கவை என்பது தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், அந்த பாதையைப் பயன்படுத்துபவர்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும்' என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்பதற்காக இராணுவத்தின் 8ஆவது சிங்க படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் பணிகளில் ஈடுபட்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாக நம்பப்படும் நபர்களை மீட்கும் பணிகளை 16 இராணுவத்தினர் அடங்கி குழுவொன்றும், மேலும் 30 பேரடங்கிய குழுவொன்றும் நேற்று மாலை வரை முன்னெடுத்திருந்தன.

## உயிர்த்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கான நியாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கான குழுவின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுக்கிடையில் அரசுத் தலைவர் செயலகத்தில் பேச்சு நடந்தது. அரசுத் தலைவரிடம் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்வைத்த கோரிக்கைக்கமையவே அந்தப் பேச்சு இடம்பெற்றது.

நீதி அமைச்சர், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், மத விவகார அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் உட்பட விசாரணைகளுடன் தொடர்புடைய உயர்மட்டத்தினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர். இதன்போது 3 பிரதான விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள், வழக்குகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் உள்ளிட்டவை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்பது முதன்மை காரணியாக அமைந்திருந்தது.

அதற்கமைய ஓரிரு வாரங்களுக்குள் இதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு விரைவில் குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளபோதிலும், விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. எனவே விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு இந்த ஆளும்தரப்பிடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையாவது நிறைவேற்றப்படும் என்று நம்புகின்றோம்.

இரண்டாவது காரணி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதாகும். அது மாத்திரமின்றி அந்த அறிக்கை மக்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கின்றோம். குறிப்பிடவொரு காலப்பகுதிக்குள் விசாரணைகள் நிறைவு செய்யப்படவேண்டும் எனநிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தமையால், வெளிநாடுகளிலுள்ளவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. எனவே அந்த அறிக்கையை முறையாக மதிப்பாய்வு செய்து குற்றப்புலனாய்வுப் பிரிவு அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

அரசுத் தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை மக்களுக்கும் வெளிப்படுத்தப்படவேண்டும் என்பது அடுத்த பிரதான காரணியாகும். விரைவில் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக அரசுத் தலைவர் உறுதியளித்துள்ளார். இம்மூன்று காரணிகள் தொடர்பில் நாம் ஓரளவுக்கு வெற்றிகரமான பதில்களைப் பெற்றுள்ளோம். மேலும் சிங்கள மற்றும் தமிழ் அடிப்படைவாத குழுக்கள் சில தடை செய்யப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தாக்குதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் சில முஸ்லிம் அமைப்புக்கள் தடை செய்யப்பட்டன.

எவ்வாறிருப்பினும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் சில அமைப்புக்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமான விடயமாகும். தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் மத மற்றும் இன அடிப்படைவாத குழுக்கள் நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளடங்கலாக மேலும் பல சந்தர்ப்பங்களில் இவை அடிப்படைக் காரணிகளாக அடையாளங்காணப்பட்டுள்ளன. இந்த அடிப்படைவாத குழுக்கள் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாகும். நாட்டில் மீண்டும் இதுபோன்றதொரு சமூகக் கொலை இடம்பெற இடமளிக்க முடியாது. அடிப்படைவாதங்களால் நாட்டைப் பலவீனப்படுத்த மீண்டுமொருமுறை இடமளித்துவிடக்கூடாது - என்றார்.

## இனவாதத்திற்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையுடன், அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து 'இலங்கைதினம்' கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து இலங்கை தினக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்படுகின்றமை, இதில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் பிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்டதுடன், இது தொடர்பாக தமது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

அரசுத் தலைவர் அநுரகுமாரவின் வழிகாட்டுதலின் கீழ், ஆளும்தரப்பால் செயல்படுத்தப்படும் போதைப்பொருள் அச்சுறுத்தலைத் தோற்கடிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு மற்றும் நாட்டில் தேசிய மற்றும் மத ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு நிபந்தனையின்றி தாம் ஆதரவளிக்கிறார்கள் எனவும் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்..

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் 'இலங்கை தின' தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பாடு குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், அரசியல், மத மற்றும் கலாசார பன்முகத்தன்மைக்கு அப்பால், அனைவரும் ஒரு பொதுவான தளத்தில் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சிகளையும் செயற்திட்டங்களையும் உருவாக்குமாறு ஏற்பாட்டுக் குழுவிற்கு அரசுத் தலைவர் மேலும் அறிவுறுத்தினார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முழுப்பர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீர ஆகியோருடன் தமிழ் முற்போக்கு கூட்டணியை (வீ- ஊணபு) பிரதிநிதித்துவப்படுத்தி மனோ கணேசன் மற்றும் பழனி திகம்பரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை (புளீனிளீ) பிரதிநிதித்துவப்படுத்தி ரிஷாத் பதியுதீன், இலங்கை முஸ்லிம் காங்கிரஸை (றீஸினிளீ) பிரதிநிதித்துவப்படுத்தி ஹிஸ்புல்லா, இலங்கை தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி காதர் மஸ்தான், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியைப் (ம்வீஹிபு) பிரதிநிதித்துவப்படுத்தி அடைக்கலநாதன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியைப் (ஹ்ணூவீபுலு) பிரதிநிதித்துவப்படுத்தி ஸ்ரீநாத், கோடீஸ்வரன், ரவிகரன் மற்றும் சுயேச்சைக் குழு உறுப்பினர் அருச்சுனா ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## வைத்தியர்களைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்கொண்டுசெல்ல முடியாமல்போகும். அதனால் வைத்தியர்களை நாட்டுக்குள் தக்க வைத்துக்கொள்ள ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பெரும் மருந்து தட்டுப்பாடு இருந்து வருகிறது. 218 வகையான மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அத்தியாவசிய உயிர் பாதுகாப்பு 160 மருந்துப்பொருட்களும் களஞ்சியப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அதேபோன்று தேசிய வைத்தியசாலை அறிவித்தல் பலகையில், அங்கு செய்யப்பட முடியாத வைத்திய சோதனைகள் என ஒரு அறிவித்தல் போடப்பட்டிருக்கிறது. இந்த வைத்திய பரிசோதனைகளை அங்கு செய்ய முடியாமல் இருப்பதே இதற்குக்

தொடர்ச்சி 06ம் பக்கம்....


JDR CARE HOME
&
MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆளும்தரப்புக்கு கொண்டாட்டம் மக்களுக்குத் திண்டாட்டம்

இலங்கை உள்நாட்டு வரிவாய்த்துறை (IRD) சமீபத்தில் அறிவித்துள்ள ரூபாய் 2 டிரில்லியனைக் கடந்த வரி வருவாய், அரசின் பார்வையில் மிகப் பெரிய சாதனையாகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டு முடிவிற்கு இன்னும் ஆறு வாரங்கள் உள்ள நிலையில் இந்த வருவாய் இலக்கை எட்டியதாக அரசியல் மேடை முழுவதும் பெருமிதக் குரல்கள் ஒலிக்கின்றன. நிதி ஒழுங்கு, பொருளாதார முன்னேற்றம், நிர்வாகத் திறன் ஆகியவற்றுக்கான 'சான்று' என ஆளும்தரப்பு தன்னைத் தானே பாராட்டிக் கொள்ளும் சூழலை இது உருவாக்கியுள்ளது.

ஆனால், இந்த எண்ணிக்கைகளின் கீழ் மறைந்திருக்கும் உண்மை மிகவும் வேறுபட்டது. இந்தச் சாதனை பொருளாதாரம் விரிந்ததாலோ, உற்பத்தி திறன் உயர்ந்ததாலோ, மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டதாலோ உருவானது அல்ல. மாறாக, மக்கள் மேல் விதிக்கப்பட்ட முன்னெப்போதும் இல்லாத வரிச் சுமைதான் இந்த வருவாயின் அடித்தளம். உண்மையில் கொண்டாடப்படவேண்டியது இங்கு மக்களின் தியாகமே. ஆனால் அந்த தியாகத்திற்கு மக்கள் பெற்ற பயன் எது?

### வரி வசூலின் உயர்வின் தாக்கம்

நாடு திவாலான நிலையிலிருந்து மீண்டு வருவதாக ஆளும்தரப்புத் தெரிவிக்கின்றது. ஆனால் மக்களிடம் எழும் அடிப்படை கேள்வி ஒன்றே 'இந்த வரிச் சுமைக்குப் பதிலாக எது மேம்பட்டது?' குடும்பச் செலவுகள் குறைந்ததா? மருத்துவ சேவைகள் மேம்பட்டதா?

கல்வி செலவுகள் குறைந்ததா? வாழ்வின் அழுத்தம் தளர்ந்ததா?

பதில் எல்லாவற்றிற்கும் இல்லை என்பதுதான்.

விலை உயர்வு தொடர்கிறது. பணவீக்கம் மீண்டும் மேலெழுகிறது. வருமானத்துக்கு இரு முனைகளிலும் – சம்பளத்திலும் செலவிலும் – வரிச் சுமை கயிறுபோல் இறுக்குகிறது. அரச மருத்துவமனைகள் மருந்துகளின்றி திணறுகின்றன; மருத்துவர்கள் அதிகம் மருந்துகளை தனியார் மருந்தகங்களில் வாங்கச் சொல்லும் நிலை உருவாகியுள்ளது. தேர்தல் பரப்புரையில் மருந்துகளுக்கு விதிக்கப்பட்ட 'வற்' வரியை நீக்குவோம் என்று கூறிய அரசு இன்று அந்த வாக்குறுதியைத் துறந்துள்ளது.

### வாக்குறுதிகள் காற்றில்

புதிய கல்வியாண்டை எதிர்கொள்வதற்குத் தயாராகும் பெற்றோர்கள் மீதுகூட 'வற்' வரிச் சுமை தொடர்கிறது. கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவோம் என்ற வாக்குறுதியை வழங்கிய அரசே இன்று நூற்றுக்கணக்கான 'சிறு பாடசாலைகளை' மூடத் தயாராகிறது.

அரசுத் துறை வாகனங்களை விற்று பாடசாலைகளைக் கட்டுவோம் என்ற வாக்குறுதி எங்கே? அதற்கு பதிலாக, பெரும் நிதி விரயத்துடன் 1,775 புதிய 'டபுள் கப்' வாகனங்கள் அரசியல்வாதிகளுக்காக வாங்கப்பட உள்ளன.

2026 பாதீட்டில் இந்த வாகனக் கொள்வனவுக்கென ஒதுக்கப்பட்ட 12.5 பில்லியன் ரூபாய் வெறும் ஒரே ஆண்டின் லீசிங் கட்டணம்தான் என்பதை மக்கள் உணர்ந்தபோதெல்லாம், இந்தக் கொள்முதல் நாட்டின் முன்னுரிமைகளைப் பற்றி பெரும் சந்தேகங்களை எழுப்புகிறது.

### உண்மை வேறு

அரசு தன்னை நிர்வாகத் திறன் கொண்டதாகவும், ஊழல் நீக்கப்பட்டதாகவும், நிதிச் சுறுசுறுப்பு பெற்றதாகவும் கூறுகிறது. ஆனால் மக்கள் கேட்கும் உண்மைச் சோதனை மிகவும் எளிதானது:

'அப்படியென்றால் ஏன் விலைகள் குறையவில்லை?'

ஊழல் காரணமாக விலைகள் உயர்ந்தது என்றால் – அதனை நீக்கிய பின் விலைகள் ஏன் இன்னும் உயர்ந்து கொண்டிருக்கின்றன?

முன்னாள் ஆட்சியாளர்கள் திறமையற்றவர்கள் என்றால் – இன்று மின்சார சபை ஏன் மீண்டும் நட்டத்தில் செல்கிறது? அதுவும் தெனாசியாவின் உயர்ந்த மின்சார கட்டணங்களை வசூலித்தும்கூட ஏன் அது நட்டமடைகிறது?

மழை அதிகம், நீர்த்தேக்கங்கள் நிரம்பியுள்ளன, புதிய பெரிய திட்டங்கள் எதுவும் இல்லை, ஊழல் இல்லை என அரசே கூறுகிறது. இருந்தும் மக்கள் ஏன் அதே சுமையிலோ அதற்கும் மேலான சுமையிலோ வாழ்கிறார்கள்?

### அதிர்ச்சியூட்டும் பொருளாதார பார்வை

2026 பாதீட்டுரையில், அரசுத் தலைவரின் நிலைப்பாடு நாட்டை உணர்ச்சியற்ற கணக்கீட்டின் திசைக்குத் தள்ளுகிறது.

நாட்டின் வெளிநாட்டுக் கடனில் 10% கூட தள்ளுபடி கிடைக்கவில்லை. போதாததற்கு மொத்தக் கடனைச் செலுத்தும் காலமும் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் வெளிநாட்டு கடன் வழங்குநர்களுக்கு மிகப் பெரிய தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது – அதற்காக மீண்டும் மக்களின் நலனே பலிகடாவாகிறது.

நாட்டின் வளர்ச்சிக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், மக்களின் சமூக நலனுக்கும் மேலாக – 'கடன் செலுத்துவது மட்டுமே அரசின் இலக்கு'

என்று வெளிப்படையாக தெரிகிறது.

ஒரு உலகப் பொருளாதார அதிர்ச்சி, எரிபொருள் விலை உயர்வு, அல்லது இயற்கை பேரழிவு மட்டுமே போதும் – இன்று ஆளும்தரப்பு பெருமைபடும் 'நிலைத்தன்மை'யைச் சிதைப்பதற்கு.

### முதுகெலும்பு புறக்கணிப்பு

தமதுவிளைபொருள்களைவிற்கமுடியாமல்திணறும்விவசாயிகள்போராட்டங்களில் குதிக்கப் போகிறார்கள் என்று எச்சரிக்கிறார்கள். உரம், விதை, பாசனம் – எதற்கும் அரசு உறுதியான தீர்வு வழங்காமல் 'அடுத்த ஆண்டுக்குத்' தள்ளுகிறது.

அதேசமயம் நாட்டில் பயிரிடப்படும் அரிசி, வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற பொருட்களையே வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறது.

உலக உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை முன்னிட்டு இது மிக ஆபத்தான அணுகுமுறை.

### சாதனை அல்ல

ரூ. 2 டிரில்லியன் வரி வருவாய் அரசு பெருமையடையும் எண்ணிக்கையாக இருக்கலாம். ஆனால் மக்களின் நெஞ்சில் அது பெருமை அல்ல – பெரும் சுமை. மக்கள் உணரும் வரை எந்தச் சாதனையும் உண்மையான சாதனையல்ல.

மருந்து விலை குறையவில்லை, கல்விச் செலவு குறையவில்லை, மின்சார கட்டணம் குறையவில்லை, குடும்ப வாழ்வு எளிதாகவில்லை – இவை அனைத்தும் அரசு பெருமையடையும் கதையை நிராகரிக்கின்றன.

அரசு உண்மையில் மக்களின் தியாகத்தை மதிக்க விரும்பினால்,

அந்த வரிகளின் பயன் மக்களுக்கு திரும்பிக் கிடைக்க வழிசெய்ய வேண்டும். அதுவரை, ரூ. 2 டிரில்லியன் சாதனை என்பது ஒரு பொருளாதார உயர்வே அல்ல. அரசின் பேச்சுக்கும் மக்களின் வாழ்க்கை யதார்த்தத்திற்கும் இடையே விரியும் பெரும் விரிசலின் சின்னமாகவே அது நிற்கும்.

## அவசிய மருந்துகளின் பற்றாக்குறையால் நடுத்தரக் குடும்பங்கள் பெரிதும் பாதிப்பு

### காவிந்த எம்.பி. சுட்டிக்காட்டு

நாட்டில் 862 அத்தியாவசிய மருந்து பொருட்களில் சுமார் 300 வகையான மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. சகல அரச வைத்தியசாலைகளிலும் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவும் போது இலவச சுகாதார சேவையை மாத்திரம் நம்பியுள்ள நடுத்தர மக்களின் நிலைமை பாதிக்கப்படும். அரச துறைகளின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வைத்தியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட சுகாதாரத்துறை இன்றும் அந்த பாதிப்பில் இருந்து மீளவில்லை. முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல அப்பாவி மக்களின் உயிரை அச்சுறுத்தலுக்குள்ளாக்கினார். அதற்கு எதிராக நாங்கள்தான் அன்று எதிர்ப்பு தெரிவித்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தோம்.

சுகாதார துறையில் நிலவும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதாகவும்,மருந்து பொருட்கள் மீதான 'வற்' வரியை இரத்துச் செய்வதாகவும் அரசுத் தலைவர் அநுரகுமார வாக்குறுதி வழங்கியிருக்கிறார். ஆனால் இன்று வரை அது நிறைவேற்றப்படவில்லை. இதனால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நாட்டில் 862 அத்தியாவசிய மருந்து பொருட்களில் சுமார் 300 வகையான மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. சகல அரச வைத்தியசாலைகளிலும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுபாடு நிலவும்போது இலவச சுகாதார சேவையை மாத்திரம் நம்பியுள்ள நடுத்தர மக்களின் நிலைமை பாதிக்கப்படும். தற்போது பெரும்பாலான அரச வைத்தியசாலைகளில் வெளியக மருந்தகங்களில் மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்கான துண்டுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார்கள். இந்த அர்ப்பணிப்பினால்தான் இலங்கையின் இலவச சுகாதார சேவை பாதுகாக்கப்படுகிறது. ஆசியாவில் இன்றளவில் முன்னிலையில் காணப்படுகிறது. இலவச சுகாதார சேவையில் தரத்தை மேம்படுத்த வேண்டும்.

2022 - 2025 வரையான காலப் பகுதியில் 726 விசேட வைத்தியர்களும், 1,116 மருத்துவ உத்தியோகத்தர்களும், உள்ளடங்களாக 2,842 சுகாதார சேவையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். அதேபோல் 6,000 சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். வைத்தியர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் இலவச சுகாதார சேவை கட்டமைப்பும் வீழ்ச்சியடையும்.

வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாட்டுக்கு ஆளும்தரப்பு தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும். அரச துறைகளின் ஏனைய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் வைத்தியர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் வைத்தியர்களின் குடியகல்வை தடுக்க முடியும் - என்றார்.

## சுகாதார சேவை பற்றி சில ஊடகங்கள் பொய்ச் செய்திகளே வெளியிடுகின்றன

### பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி குற்றச்சாட்டு

சுகாதார சேவை தொடர்பில் ஒருசில ஊடகங்கள் திட்டமிட்ட வகையில் போலியான செய்திகளை மாத்திரமே வெளியிடுகின்றன. 350 அத்தியாவசிய மருந்து பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. மருந்து விநியோகத்தில் எந்நிலையிலும் தட்டுப்பாடு ஏற்படாதெனன சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கு கடந்த ஆண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் சுகாதார சேவைக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுகாதார சேவை தொடர்பில் பொதுக் கொள்கை ஒன்றை தயாரிப்பதற்கும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒருசில ஊடகங்கள் சுகாதார சேவை குறித்து திட்டமிட்ட வகையில் போலியான செய்திகளை மாத்திரமே வெளியிடுகின்றன.அண்மையில் தேசிய பத்திரிகை ஒன்று அத்தியாவசிய மருந்து தட்டுப்பாட்டினால் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் இடைநிறுத்தம் என்று செய்தி வெளியிட்டது.இந்த விடயம் குறித்து ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் அது போலியான செய்தி என்று உறுதிப்படுத்தப்பட்டு குறித்த பத்திரிகை நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டது.

தவறான செய்தியை வெளியிட்டதற்காக அந்த ஊடக நிறுவனம் மறுநாள் மறுப்புச் செய்தி வெளியிட்டது. போலியான செய்தியை தலைப்புச் செய்தியில் வெளியிடுகிறார்கள். திருத்தச் செய்தியை எங்கோவொரு பக்கத்தில் சிறியதாகப் பிரசுரிக்கிறார்கள். சுகாதார சேவை குறித்து போலியான செய்திகளை வெளியிடும்போது நடுத்தர மக்களே பாதிக்கப்படுவார்கள்.

மருந்து தட்டுப்பாடு பற்றி எதிர்க்கட்சியின் உறுப்பினர் விடயங்களை முன்வைத்தார்.பயன்பாட்டுக்கு அத்தியாவசியமான மருந்து பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேவைக்கு அதிகமான மருந்துகளை கொள்வனவு செய்து அவற்றை களஞ்சியப்படுத்துவதற்குரிய வசதிகள் கிடையாது. இதற்கு கடந்த ஆளும்தரப்புக்களே பொறுப்புக்கூற வேண்டும். புதிய மருந்து களஞ்சியசாலைகளை அமைப்பதற்கும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

350 அத்தியாவசிய மருந்து பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. மருந்து விநியோகத்தில் எந்நிலையிலும் தட்டுப்பாடு ஏற்படாது. சுகாதார உத்தியோகத்தர்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் 20 அல்லது 10 வருடகாலம் பழமையானவை. இந்த கோரிக்கைகளுக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காணவேண்டும். அதற்கு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் அரசியல் நோக்கங்களை புறக்கணித்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# போருக்குப் பின்னரும்கூட வடக்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை

## அடைக்கலநாதன் எம்.பி. சுட்டிக்காட்டு

போரின் பின்னரான காலப்பகுதியிலும் வடக்கு மாகாணம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அமைச்சர்கள், வெளிநாடுகளின் தூதுவர்கள் வன்னிக்கு வருவதற்குத் தயங்குகிறார்கள். அமைச்சர்கள், தூதுவர்கள் வன்னிக்கு வரவேண்டும். போரினால் பாதிக்கப்பட்டுள்ள அந்த மக்களையும் கவனத்தில் எடுக்க வேண்டுமென ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அழைப்பு விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்களான சிவராம் , நடேசன், சுகிர்தராஜான் ஆகியோர் உள்ளிட்ட தமது உயிரை தியாகம் செய்த அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் இந்தச் சபையில் எனது அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றேன். ஊடகவியலாளர்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. வீட்டுத் திட்டம் இல்லை. முறையான சம்பளத் திட்டம் இல்லை. ஊடகவியலாளர்களுக்கான ஒய்வூதியம் மறக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு வங்கிக் கடன்கள் மறுக்கப்படுகின்றன. எனவே இவை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

போரினால் உள ரீதியாப் பதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வன்னியில் குறிப்பாக மன்னார்,முல்லைத்தீவில் வைத்தியசாலை பணிகள் மந்த கதியில் உள்ளன. வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற போதும் வைத்தியசாலைகளில் போதிய வளங்கள் இல்லாதுள்ளன. இந்த விடயத்தில் ஆளணிப்பற்றாக்குறையைச் சொல்வதா, கட்டடப்பற்றாக்குறையை சொல்வதா, இயந்திர பற்றாக்குறையை சொல்வதா? இங்கு ஒன்றுமே இல்லை.

எந்த ஆளும்தரப்பாக இருக்கலாம், தூதரகங்களாக இருக்கலாம் இவர்களுக்கு வன்னிக்குள் வருவதென்பது பெரிய கஷ்டமாக இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் அங்குதான் இருக்கின்றார்கள், ஆனால் வருகின்றார்கள் இல்லை. ஒரு சில தூதுவர்களைத் தவிர ஏனையவர்கள் வன்னிக்குள் வருவதேயில்லை. அல்லது வருவது மிகக்குறைவு. எனவே அமைச்சர்கள் தூதுவர்கள் வன்னிக்கு வர வேண்டும். அந்த மக்களையும் கவனத்தில் எடுக்க வேண்டும். சுகாதார அமைச்சர் மன்னார் . முல்லைத்தீவிற்கு வரவேண்டும்

கர்ப்பிணித் தாய்மார் குழந்தைப்பேறுக்காக யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவுக்குச் செல்லவேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் செல்வதானால் 2 மணித்தியாலம் வேண்டும். ஆகவே இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சி.டி. ஸ்கேனார் ஒன்றைத் தருவதாக கடந்த முறை மன்னாருக்கு வந்தபோது சுகாதார அமைச்சர் கூறினார். அதற்கான கட்டடம் உள்ளது. சிடி ஸ்கேனார்தான் இல்லை.

வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் உண்மையில் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்கின்றார்கள். ஆனால் மன்னார் வைத்தியசாலைக்கு மக்கள் போகத் தயங்குகின்றார்கள். உயிருடன் போகும் தாம் சடலமாகவே வெளியே வரவேண்டியேற்படுமென பயப்படுகின்றார்கள். அங்கு போதிய வளங்கள், வசதிகள் இல்லாது எப்படி வைத்தியர்கள் தமது கடமையை செய்ய முடியும்? தென்னிலங்கையிலிருந்து சிங்கள வைத்தியர்கள் எமது இடங்களுக்கு விரும்பிச் செல்கின்றார்கள். ஆனால், தமிழ் வைத்தியர்கள் பல்கலைக்கழகப் படிப்பு முடிந்தவுடன் வெளிநாடு செல்கின்றார்கள். அந்த வகையில் சிங்கள வைத்தியர்கள், தாதியர்களை நான் பாராட்டுகின்றேன்.

மன்னர் ஆதார வைத்தியசாலை கஷ்டப் பிரதேச வைத்தியசாலையாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அங்கு செல்லும் வைத்தியர்கள் 6 மாதங்களில் திரும்பி விடுகின்றார்கள். ஆகவே கஷ்டப் பிரதேச வைத்தியசாலை பட்டியலிலிருந்து மன்னார் வைத்தியசாலை விடுவிக்கப்பட்டால்தான் வைத்தியர்கள் அங்கு நிரந்தரமாக இருப்பார்கள் . இந்தியா முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு யூத முன்வந்துள்ளது. எனவே அதற்கான திட்டங்களை காலம் தாழ்த்தாது முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

# ஊடகர்களின் படுகொலைகளுக்கும் நீதி பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

போர்க்காலப்பகுதியில் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் செயற்பாடுகளுக்கு நீதி பெறுக் கொடுக்கப்படவேண்டும். ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டால்தான் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுமென தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த போர்க்காலப்பகுதியில் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் படுகொலைசெய்யப்பட்டமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் செயற்பாடுகளுக்கும் நீதி பெறுக் கொடுக்கப்படவேண்டும்.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைகளை கஸ்ட மருத்துவமனைகள் பட்டியலில் இருந்து நீக்குவதுடன், நாட்டின் ஏனையபாகங்களைப்போன்று வன்னிப் பிராந்தியத்திற்கும் சமத்துவ அடிப்படையிலும் இ சமச்சீரான முறையிலும் சுகாதார வளப் பங்கீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை வடக்கு மாகாணத்தில் கடந்த 2019ஆம்ஆண்டு முறையாக நேர்முகத்தேர்வில் பங்குபற்றி நியமனம் வழங்கப்பட்டு பின்னர் இரத்துச்செய்யப்பட்ட சுகாதார உழியர்கள் 454 பேரையும் எதிர்வரும் 2026ஆம் ஆண்டில் மீளஆட்சேர்ப்புச் செய்யவேண்டும்.

இந்த பேரவையிலே கடந்த ஓராண்டுகாலமாக சுகாதாரத்துறையின் சமச்சீரற்ற வளப்பரம்பல் தொடர்பில் பலமுறை விவாதித்திருக்கிறேன். 2026ஆம் ஆண்டில் எங்கள் முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைகளை கஸ்ட மருத்துவமனைகள் பட்டியலில் இருந்து நீக்கிவிடுங்கள் என்ற கோரிக்கையை இன்றும் எனது முதல் கோரிக்கையாக இந்தப் பேரவையிலே முன்வைக்கிறேன்.

நாங்கள் அதிகமாக கேட்கவில்லை. ஏனைய மாவட்டங்களைவிடவும் கூடுதலான வசதிகளை தாருங்கள் என்று கேட்கவில்லை. இந்தத்தீவிலே ஏனைய அனைத்து மாவட்ட பொது மருத்துவமனைகளுக்குமான வசதிகளை எங்கள் மாவட்ட பொது மருத்துவ மனைகளுக்கும் கிடைக்கச் செய்யுங்கள் என்றே கேட்கின்றோம்.

பௌதிக வளப்பற்றாக்குறை, மனித வளப்பற்றாக்குறை இநலிவுற்ற போக்குவரத்து வசதி, சம்பளமற்ற விடுகை மற்றும் இணைப்பு மூலமான செயலற்ற ஆளணி மிகுதல் என்பன வன்னிமாவட்டத்தின் சுகாதாரத்துறையின் தரமான சேவை வழங்கலுக்கு சவாலாகின்றன,

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுகாதார சேவை வழங்கலில் உள்ள நோயாளர் காவு வண்டிகள் 22 இல் 18 வண்டிகளும் 12 இருவரிசை இருக்கைகொண்ட ஊர்திகளில் 5 ஊர்திகளும் 10 ஆண்டுகளுக்கும் மேலான நீடித்த உழைப்பைக் கொண்டன. இதனால் வாகனங்களுக்கான வருடாந்த திருத்தச்செலவு உயர்வதோடு அடிக்கடி திருத்தத்தேவைகளுக்கு உள்ளாகுவதால் உடனடி நோயாளர் பரிமாற்றங்களும் முல்லைத்தீவில் கேள்விக்கு உள்ளாகிறது. முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவை வழங்கலின் தரமேம்பாட்டுக்கு புதிய நோயாளர் காவு வண்டிகள் இரண்டேனும் 2026இல் வழங்க முயற்சி செய்யுமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மனிதவளப்பற்றாக்குறை பலதளத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் மருத்துவ சேவை வழங்கலைப் பாதிக்கிறது.

உயர்மட்ட மருத்துவ நிபுணர்கள் தொடக்கம் சிற்றூழியர் வரையான ஆளணிப்பரம்பலில் நிலவும் பற்றாக்குறை தரமான சுகாதார சேவை வழங்கலுக்கு முல்லைத்தீவில் தடையாகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான நிரந்தர மருத்துவ நிபுணர் ஆளணி 23. தற்போது இருப்பது 1. முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்காலிக அடிப்படையிலான மருத்துவ நிபுணர்கள் பதினெண்மர் பணியாற்றுகின்ற போதும் ஒருவர் மட்டுமே நிரந்தர மருத்துவ நிபுணராக முல்லைத்தீவில் பணியாற்றுகின்றார். 2026இல் எங்கள் மாவட்டத்துக்கு நிரந்தர மருத்துவ நிபுணர்களை வழங்குங்கள்.

நிரந்தர மருத்துவ நிபுணர்கள் முக்கிய நான்கு துறைகளுக்கும் கிடைக்கும் போது ஏனைய அனைத்து மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் உள்ள பயிற்சி மருத்துவர்களை முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைகளும் பெறமுடியும். மேலும் துணைமருத்துவப் பணியாளர்களான மருந்தாளர், மருத்துவ ஆய்வுகூட தொழினுட்பர், இயன்மருத்துவர், கதிர்ப்பட பதிவாளர், மருந்துக்கலவையாளர் ஆகியோருக்கான வெற்றிடங்களும் முல்லைத்தீவில் உடன் நிரப்பவேண்டிய தேவைக்குரியன.

வடமாகாணத்தில் உள்ள சுகாதாரப்பணி உதவியாளர்களின் வெற்றிடம் தற்பொழுது 650 மேல் காணப்படுகிறது. இதனால் அடிப்படைச் சுகாதார சேவை வழங்கலில் ஒவ்வொரு மருத்துவ நிறுவனமும் மிகுந்த நெருக்கீட்டை எதிர்கொள்கின்றது.

2019 ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் முறைப்படியான நேர்முகத்தேர்வின் பின்னர் நியமனம் வழங்கப்பட்டு பின்னர் இரத்துச்செய்யப்பட்டமை தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் மீள் நியமனத்துக்கான வேண்டுகைகள் அரசுக்கு விடுக்கப்பட்டன. ஆனால் இன்று வரை தீர்வு கிடைக்கவில்லை. ஆகவே இந்த விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# ஆனந்தசுதாகரனின் 2 பிள்ளைகளுக்கும் ஆளும்தரப்பின் ஆற்றுப்படுத்தல் என்ன?

## நாடாளுமன்றில் ரவிகரன் எம்.பி. கேள்வி

வளரும் காலத்தில் தாயையும் இழந்து பின்னர் வளர்த்த பாட்டியையும் இழந்து தற்போது தனித்திருக்கும் – தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின்– பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு ஆளும்தரப்பின் வரவு ,செலவுத்திட்டம் என்ன ஆற்றுப்படுத்தலை வழங்கப்போகிறதென தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இத் தீவிலே ஆயுதங்களை விரும்பி ஏற்ற இனமல்ல எங்கள் இனம். அரசியல் வழியில் போராடித் தோற்று ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். 2009 உடன் ஆயுதமும் மௌனிக்கப்பட்டது. இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே மாறிவரும் ஆளும்தரப்புக்கள் முயல்வதாக அறிக்கைகள் காட்டுகின்றன. செய்திகளில் ஆட்சியாளர்கள் நீங்கள் மாறி மாறி எங்களை ஏமாற்றுகிறார்கள்.

எங்கள் அயல் வீட்டுப் பிள்ளை – தம்பி ஆனந்தசுதாகரின் மகன் மற்றும் மகளைப் போல பிறந்தது முதல் இறக்கும் வரை பிள்ளைகளும், சகோதரர்களும், மனைவிகளும், கணவர்மாரும், தந்தையரும் தாய்மாரும், பாட்டன், பாட்டி மாருமாக ஒட்டுமொத்த ஈழத்தமிழினமும் இன்னமும் வடுக்களோடுதான் நகர்கிறோம். எங்களுக்கு ஆரோக்கியமான சமூக வாழ்வுக்கான கதவை உங்கள் அரசு எப்போது திறக்கப்போகிறது.

இந்தத் தீவின் நல்லிணக்கத்துக்கான முதற்படியே – எங்களுக்காக குரல்கொடுத்து இப்போதும் சிறையில் வாடும் எங்களின் உறவுகளின் விடுதலைதான். தயவுசெய்து எங்கள் உறவுகளை விடுவித்து நல்லிணக்கச் சைகையைக் காட்டுங்கள். உங்கள் வரவு ,செலவுத் திட்டம் முன்மொழியும் ஆரோக்கிய வாழ்வுக்கான வழியை ஈழத் தமிழர்களுக்கும் திறந்து விடுங்கள் – என்றார்.

காலைக்கதிர்
Kalāikkathir

## வைத்தியர்களைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாகும். அதனால் இது தொடர்பில் தேடிப்பார்த்து, ஆளும்தரப்பு தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

வைத்தியசாலைகளில் பெருமளவில் மருந்துப்பொருட்களுக்குத்தட்டுப்பாடுஇருந்து வருவதுபோன்று உபகரணங்களுக்கும் தட்டுப்பாடு இருந்து வருகிறது. வைத்திய பரிசோதனைகளைமேற்கொள்ள முடியாமல், சிகிச்சைக்கு வரும் நோயாளர்களை வெளியில் பரிசோதனை செய்து வருமாறு அனுப்புகிறார்கள். ஆளும்தரப்பு வைத்திய துறைக்கு போதுமானளவு நிதி ஒதுக்காமல் இருப்பதே இதற்குக் காரணமாகும். இதனால் எமது சுகாதாரத்துறை பெரும் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

மேலும் விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் நாட்டை விட்டுச் செல்கின்றனர். நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முன்னர், வருடத்துக்கு 200 வைத்தியர்களே வெளிநாடு சென்றுள்ளனர். ஆனால் 2022, 2023 காலப்பகுதியில் 1800 பேர் வெளிநாடு சென்றுள்ளனர். இவ்வாறு நாட்டைவிட்டு செல்லும் விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் ஏனைய துறைசார நிபுணர்களை தக்கவைத்துக்கொள்ள சுகாதார அமைச்சின் கொள்கை என்ன?

இலங்கையில் சாதாரண வைத்தியர் ஒருவரின் அடிப்படைச்சம்பளம் 58ஆயிரத்தி 305 ரூபா. ஐக்கிய ராஜ்ஜியத்தில் சாதாரண வைத்தியர்களின் அடிப்படை சம்பளம் 17இலட்சத்தி 555 ரூபா. இலங்கையில் விசேட வைத்தியர் நிபுணர் ஒருவரின் அடிப்படைச் சம்பளம் 88 ஆயிரம் ரூபா ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் 33 இலட்சம் ரூபா. இவ்வாறு இருக்கையில் இவர்கள், எமது நாட்டில் தங்கி இருப்பார்களா? அதேபோன்றுவைத்தியர்களின் உத்தியோகபூர்வஇல்லங்களின்நிலைமைகள் மிகவும் மோசமானதாகும்.

அதேபோன்று வைத்தியர்களின் கொடுப்பனவுகள்,அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களை அதிகரிக்க ஏன் எங்களுக்கு முடியாது? அதேபோன்று வைத்தியர்களுக்கு ஆளும்தரப்பின் வாகன அனுமதி பத்திர ஏன் வழங்க முடியாது? எங்களுக்கு வாகன அனுமதி பத்திரம் தேவையில்லை. நாட்டில் இருக்கும் உயர் தொழில் வல்லுனர்களுக்கு கொடுக்க நடவடிக்கை எடுங்கள் - என்றார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்புக்கு எதிரான நுகேகொடை எதிர்ப்புப் பேரணி மிக வெற்றிகரமாக இடம்பெற்றது. அதன் ஏற்பாட்டாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஐக்கிய தேசிய கட்சி என்பது தெற்கு அரசியல் முகாம் ஆகும். ஆளும்தரப்புக்கு எதிராக அமைக்கப்படும் எந்தவொரு சக்தியுடனும் இணைவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் தயாராக இருக்கின்றோம். கட்சித் தலைமைத்துவத்தினால் எடுக்கப்படும் எந்தவொருதீர்மானத்துடனும்இணக்கத்துடன் செயற்பட நான் தயாராக இருக்கின்றேன்.

எனது அரசியல் வாழ்வில் என்றும் இல்லாதவாறு நுகேகொடை பேரணியில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது. எனினும் அவற்றுக்கு மத்தியிலும் நாம் வெற்றிகரமாக அதை நிறைவு செய்துள்ளோம். நாமல் ராஜபக்சவின் உரை நிறைவடைந்து இரண்டு நிமிடங்களுக்குள் சுமார் ஒரு மணித்தியாலம் நுகேகொடை முழுதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. உயர்தரப் பரீட்சை தொடர்பில் மிகுந்த அவதானத்துடனேயே கூட்டம் நடத்தப்பட்டது. மாலை 5 மணிவரை ஒரு பட்டாசுகூட வெடிக்கப்படவில்லை.

நுகேகொடை கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மாத்திரமின்றி ஐக்கிய மக்கள்சக்தியின் சுஜீவசேனசிங்க, ஹர்ஷண ராஜகருணா உள்ளிட்டோரும் எமக்கு பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தனர். அடுத்தடுத்த கூட்டங்களில் அவர்கள் நிச்சயம் கலந்து கொள்வர் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது. வரும்நாட்களிலும் இவ்வாறான பல கூட்டங்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 1000 சிறிய மக்கள் சந்திப்புக்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் இந்த பயணத்தை வெற்றிகரமாகத் தொடர முடியாது என்பது நுகேகொடை கூட்டத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாகும். தெற்கு முகாம் என்ற என்ற ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணையவேண்டியது அத்தியாவசியமானதாகும்.

இப்போதாவது நாம் அதனைச் செய்யாவிட்டால், இந்த இணைவு மேலும் தாமதப்படுத்தப்பட்டால் இந்த தெற்கு முகாமும் வெவ்வேறு திசைகளில் சிதைவடையக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. சவால்களை எதிர்கொள் ளக் கூடிய குழுக்களுடன் இணைவதற்கு மக்கள் கட்சி பேதம் பார்ப்பதில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி சற்று ஆழமாக இந்த விடயத்தைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். முன்னாள் அரசுத் தலைவர் ரணில்விக்கிரமசிங்கநாடுதிரும்பியவுடன்இது குறித்துஅவருடன்கலந்தாலோசிக்கவுள்ளோம். ஆளும்தரப்புக்கு எதிராக எழுவதற்கு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே எதிர்க்கட்சிகளின் பொறுப்பாகும். அந்த பொறுப்பைநாம்நிறைவேற்றியிருக்கின் றோம். எனவே ஐக்கிய மக்கள் சக்தி தீர்க்கமான தொரு முடிவை எடுப்பதற்கு தாமதிக்கும் பட்சத்தில் 2024 தேர்தல் முடிவுகளைப் போன்று மீண்டுமொரு தோல்வியை சந்திக்க நேரிடும்.

ரணில் - சஜித் இணைவதற்கு நான் தடையாக இருக்கின்றேன் என்று எவரேனும் கருதினால் ஒய்வு பெறவும் நான் தயாராக இருக்கின்றேன். இவ்விரு தரப்பின் இணைவிற்காக பலி கடா ஆவதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அரசிய லில் பதவிகளைவிட ஐ.தே.க. மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்றார்.

## மத்திய அரசே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளுக்கான விதிகள் முறையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டன. மாகாண சுகாதார அதிகார சபைனை முறையான குறைமதிப்பிற்கு உட்படுத்தல் மற்றும் அரசமைப்பு பிரதிநிதித்துவத்திலிருந்து பின்வாங்குதல் இலங்கையில் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையாகும்.

இந்தவரையறுக்கப்பட்ட பொறிமுறையின் உள்ளேயும்கூட, மத்திய அரசு ஒருதலைப்பட்ச துணை அரசமைப்பு நடவடிக்கைகள் மூலம் மாகாணங்களுக்கு அரசமைப்பு ரீதியாக வழங்கப்பட்ட அதிகாரங்களை தொடர்ந்து திரும்பப் பெற்றுள்ளது. சட்டங்கள், பொது நிர்வாகச்சுற்றறிக்கைகள், அரசசுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை முடிவுகள், நிர்வாக முறையற்ற செயற்பாடுகள் மூலம் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட்டது.

தற்போதைய சுகாதாரத் துறை நெருக்கடி இந்த உத்தியை எடுத்துக்காட்டுகிறது. ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களைத் திரும்பப் பெறுவது என்ற இரட்டை நோக்கத்துடன் அதிகாரத்தை சமீபத்தியதாக்குவதற்கான ஒரு திட்டமிட்ட அரசியல் திட்டம்மாகும். அதே நேரத்தில் தோல்வியின் சுய நிறைவேற் றும்தீர்க்கதரிசனத்தைஉருவாக்கியது. மத்திய அரசு நிர்வாகச் சரிவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாகாணங்க ளுக்கான அதிகாரங்களை முழுமையாக விடுவிப்பதை தடுக்கும் போது, மாகாண நிர்வாக முறைமை தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்து மத்திய ஆளும்தரப்பு தொடர்பில் அவதானம் செலுத்தும் நிலை ஏற்படும். இதுதமிழ்மக்களுக்குமறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

தற்போதைய கட்டமைப்பிற்குள், சுகாதாரம் என்பது ஒரு பகிர்ந்தளிக்கப்பட்ட விடயமாகும். மருத்துவமனைகளில் மூன்று நிறுவன வகைகளை மட்டுமே நிர்வகிக்க சுகாதார அமைச்சகம் அரசமைப்பு ரீதியாக தேசிய மருத்துவமனைகள், போதனா மருத்துவமனைகள், சிறப்புமருத்துவமனைகள் உள்ளன.

இலங்கையின் மாவட்ட பொது மருத்துவமனைகள் உட்பட மற்ற அனைத்து மருத்துவமனைகளும், அரசமைப்பு ரீதியாக மாகாண சபை அதிகாரத்தின் கீழ் வருகின்றன. எந்தவொருவரிஅமைச்சகையகப்படுத்தலும் அரசமைப்புபாதையைப்பின்பற்றவேண்டும். அவை மூன்று கட்டாய வகைகளில் ஒன்றிற்கு சட்டப்பூர்வமாக மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

28 பொது சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களில் 21 கட்டாய சட்ட மேம்படுத்தல் இல்லாமல் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சட்டவிரோத இணைப்பு ஏராளமான அடிப்படை மருத்துவமனைகளுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது. பல மருத்துவமனைகள் மாகாண நிர்வாகங்களால் முறையான மாகாண சபையின் ஒப்புதல் இல்லாமல் ஒப்படைக் கப்பட்டன. இதுஜனநாயகநிறுவனங்களையே குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

வடக்கு மாகாண பொது சுகாதார அதிகாரசபையின் நான்கு பொது சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் (யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி) உட்பட ஏழு பொது சுகாதாரப் பராமரிப்பு நிலையங்கள் மட்டுமே உரிமையுள்ள மாகாண அதிகாரிகளிடம் உள்ளன. இப்போது மாகாண சுகாதார அதிகாரசபையின் இறுதி கோட்டைகள் மற்றும் குறிப்பிட்ட கையகப்படுத்தல் இலக்குகள்.

தற்போதைய நிலையில் பொது சுகாதார அமைச்சின்பிரச்சாரம்தீவிரமாகத்தொடர்கிறது. முன்னாள் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கீழ் முந்தைய முயற்சி, அநீதியை அங்கீகரிக்கும் கொள்கை ரீதியான தெற்கு குரல்களால் ஆதரிக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் எதிர்ப்பால் இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

மாகாண நிர்வாகத்தின் மீதான பொதுமக்களின்நம்பிக்கையைஇழந்துவிட்டது. குறைந்துவரும்சேவைகளால்விரக்தியடைந்த வடக்கு ஊழியர்களும் பொதுமக்களும் மருத்துவமனை ஒப்படைப்பு மட்டுமே சட்டபூர்வமான வளங்களுக்கான ஒரே வழி என்ற தவறான கதையை நம்பத் தொடங்குகிறார்கள். இந்த திட்டமிடப்பட்ட விரக்தியை இரு தரப்பிலும் ஏற்படுத்துகிறது.

சுகாதார சேவையை பொறுத்தவரையில் வடக்கு மாகாணத்துக்கு குறைவான அளவில் தான் நிதி ஒதுக்கப்படுகிறது. அத்துடன் அங்குள்ள வைத்தியசாலைகளிலும் மனித மற்றும் பௌதீக வளங்கள் குறைவாகவே காணப்படுகிறது. வளங்கள் முறையாக பகிர்ந்தளிக்கப்படாதபோதுமானமுரண்பாடுகள் தோற்றம் பெறும். கடந்த காலங்களிலும் அவ்வானறான தன்மையே காணப்பட்டது என்றார்.



# வாகனக் கொள்வனவில் காட்டும் அக்கறை அவசிய மருந்துகளை வாங்குவதில் இல்லை

## நாமல் நாடாளுமன்றத்தில் சாட்டையடி

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கெப் ரக வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு இருக்கும் அக்கறை மருந்துக் கொள்வனவில் இருக்க வேண்டும். எமக்கு கெப் ரக வாகனம் வேண்டாம். அந்த வாகனங்களை வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்களுக்கு வழங்குங்கள் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் சுகாதார சேவையில் மனித வளத்துக்கான மானி யங்கள் குறைக்கப்பட்டது. 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திலும் அவ்வறான தன்மையே காணப்படுகிறது. நியாயமான கோரிக்கைகளை முன்வைத்தே சுகாதார துறையினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.அவர்களின் கோரிக்கையை ஆளும்தரப்பு நிறைவேற்ற வேண்டும்.

வைத்தியர்களுக்கு வாகனக் கொடுப்பனவு வழங்குவதில் என்ன பிரச்சினை உள்ளது. தேசிய மட்டத்தில் எழுந்த பிரச்சினைகளின்போது வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். ஆகவே அவர்களைப் பாதுகாக்கவேண்டும்.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் நாட்டை விட்டு வெளியேறிய வைத்தியர்கள் நாட்டுக்கு மீண்டும் வருகைத் தரவுள்ளார்கள் என்று ஆளும்தரப்பு குறிப்பிடுகிறது. அவ்வாறு இவர்கள் வருவதற்குரிய சாதகமான சூழல் என்ன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் மனநிலையில்தான் உள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கெப் ரக வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு இருக்கும் அக்கறை மருந்துக் கொள்வனவில் இருக்க வேண்டும். எமக்கு கெப் ரக வாகனம் வேண்டாம். அந்த வாகனங்களை வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவையாளர்களுக்கு வழங்குங்கள் என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறேன்

அரசுத் தலைவர் அநுரகுமரார தேர்தல் காலத்தில் வைத்தியர்களை பாதுகாப்பார் எனவும், சுகாதார துறை மீதான வெற் வரியை இரத்துச் செய்வதாகவும் குறிப்பிட்டார்.ஆனால் இந்த வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. மாறாக ஆளும் தரப்பின் உறுப்பினர்களின் நலன் குறித்து மாத்திரமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார்.

# கன மழைக்கு வாய்ப்பு

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகக் கூடும் என இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. கடந்த ஓரிரு தினங்களாக நிலவும் அதிக மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உயர்தர பரீட்ரசைக்குத் தோற்றும் மாணவர்கள் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

நிலவும் சீற்றமான வானிலை காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் எவ்வித தடையுமின்றித் தமது பரீட்சை நிலையங்களுக்குச் செல்வதற்கு இராணுவத்தின் உதவி வழங்கப்பட்டுள்ளது. நேற்று சனிக்கிழமை நெலுவ நகரில், நெலுவ – தெல்லவ வீதியின் சுமார் 150 மீட்டர் பகுதி சுமார் 3 அடி நீரால் மூழ்கியிருந்தது.

இதனால் அப்பகுதி ஊடான போக்குவரத்துக்கு உதவுவதற்காக இராணுவ டிரக் வண்டிகள் மற்றும் உழவு இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. இதேவேளை, அக்குரஸ்ஸ பிரதேசத்தில், அக்குரஸ்ஸ – சியம்பலாகொட வீதியின் 200 மீட்டர் பகுதி சுமார் 3 அடி நீரால் மூழ்கியிருந்த நிலையில், அப்பகுதி ஊடான போக்குவரத்திற்காக இராணுவ யுனிபஃவல் வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டன. இவற்றின் ஊடாக மாணவர்கள் பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய கண்டி, நுவரெலியா, கேகாலை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு அதி கூடிய மழை வீழ்ச்சி தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். இப்பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும். நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளை, கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களை தற்காலிகமாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# சஜித் தன் பலத்தை நிரூபிக்கும் வரை நாமல்தான் எதிர்க் கட்சித் தலைவர்

## மனோ கணேசன் இப்படித் தெரிவிப்பு

நுகேகொடையில்கூட்டுஎதிர்க்கட்சிகள்நடத்தியஅரசஎதிர்ப்பு கூட்டம் பல முக்கிய செய்திகளை வலியுறுத்தியிருக்கிறது. சில மாதங்களுக்கு முன் சொந்த ஊரிலேயே, 50 பேரைக் கூட, திரட்ட முடியா நிலையிலிருந்த பொது ஜன பெரமுன ஏனைய கட்சிகளுடன் இணைந்து அந்த நிலைமையை மாற்றியமைத்திருக்கிறது. சஜித் இதுபோன்றதொரு கூட்டத்தை, கூட்டி காட்டும் வரை, நாட்டில் நாமல் ராஜபக்சதான் எதிர்க்கட்சி தலைவர் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைத்தளத்தில் செய்துள்ள பதிவிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிரணிக் கூட்டம் தரும் செய்தி என்ன? பெரும்பாலும் சிங்கள பௌத்த மக்களை மட்டும் கொண்ட, கணிசமான கூட்டம். நிகழ்வு ஆரம்பிக்க முன்னரும், நிறைவடைந்த பின்னரும் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு ஊடக நிறுவனங்களின் விருப்பபடி, கூட்டம் பற்றி, செய்திகள் வெளியிடப்படலாம். அவரவர் விருப்பம் வேறு. உண்மை வேறு. இதை நாம் பகுத்து அறிய வேண்டும்.

சில மாதங்களுக்கு முன் சொந்த ஊரிலேயே, 50 பேரைக் கூட, திரட்ட முடியா நிலையில், இருந்த நாமல் ராஜபக்சவின் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, இன்று ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து தனது பலத்தை காண்பித்துள்ளது.

எனது வீட்டில் இருந்து நடந்து செல்லும் தூரத்திலேயே நுகேகொடை சந்தி காணப்படுகிறது. கூட்ட ஏற்பாட்டாளர்கள் பலமுறை நமது கட்சிக்கு அழைப்பு விடுத்தார்கள். எனினும் அந்த அழைப்பினை நாம் மறுத்து விட்டோம். எவ்வாறிருப்பினும் இந்த கூட்டத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு அரசாங்கத்தை உடனடியாகக் கவிழ்த்து விட முடியாது. அது வெறும் வர்ணமயமான கனவாகும்.

மேடையிலும் அவ்வாறு எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், ‘தான் கப்பல் கட்டுவது துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கல்ல. ஆழ்கடலில் பயணிப்பதற்கு தான்‘ என நாமல் ராஜபக்ச தனது உரையில் குறிப்பிட்டார். அந்த வகையில் இது, ஆளும்தரப்புக்கு சவால் விடும் கூட்டம் என்பதை விட, தேசத்தின் பிரதான எதிர்க்கட்சி யார் என்பதை நிலை நாட்டுவதையே முதல் கனவாகக் கொண்டிருந்தது.

இதன் மூலம் இங்கே கூடிய சிங்கள (பௌத்த) மக்கள் , சில செய்திகளை தந்திருக்கின்றது. 2019இல் கோட்டாபய ராஜபக்சவுக்கும், பின் 2024இல் அனுரகுமார திஸாநாயக்கவுக்கும் வாக்களித்த, அதே 69 இலட்சம் மக்கள், தாம் விரும்பினால் தாய் வீடு திரும்பலாம். எந்நேரமும் மாறலாம். மாறாமலும் விடலாம். எப்படியும், இங்கே நாம் தான் எஜமானர். எங்கள் ‘தேசாபிமானம்‘ தான் இங்கே ‘முதன்மைக் குடிகள்‘ என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சிறுபான்மை சில்லறைகள் அமைதியாக வேடிக்கை பார்க்க வேண்டும். அல்லது ஓரமாகச் சென்று விளையாட வேண்டும். நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவரான சஜித் பிரேமதாச இதுபோன்றதொரு கூட்டத்தை, வெளியே கூட்டி காட்டும் வரை, நாட்டில் நாமல் ராஜபக்சதான் எதிர்க்கட்சி தலைவராக இருப்பார் - என்றுள்ளார்

# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை நீக்குவது பற்றி ஆளும்தரப்பு அமைதி

## எதிர்க் கட்சிப் பிரதம கொறடா குற்றச்சாட்டு

சமூக ஊடகச் செயற்பாடுகளுக்கு பாதிப்பாக இருந்துவரும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை இரத்துச்செய்வதாக ஆளும்தரப்பு வாக்குறுயளித்திருந்தபோதும் தற்போது அது தொடர்பில் எந்த வார்த்தையையும் பேசாமல் இருக்கிறது. எமது நாட்டில் ஊடகங்களுக்கு தாக்கம் செலுத்தும் அதிகமான சட்டங்கள் நாட்டின் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக, ஊடகங்களை வரையறுக்கவே அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறதென எதிர்க்கட்சி பிரதமகொறடா கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் ஊடக சுதந்திரம் இன்னும் திருப்தியடையக்கூடியதாக இல்லை. குறிப்பாக சர்வதேச அமைப்பான தேச எல்லையற்ற ஊடகவியலாளர்கள் என்ற அமைப்பின் வருடாந்த அறிக்கைக்கு அமைய, 2025 உலக ஊடக சுதந்திர சுட்டெண்ணில் இலங்கை 189 நாடுகளில் 139ஆவது இடத்திலே இருக்கிறது. ஊடக சுதந்திரத்தில் நாங்கள் இந்தளவு பின்தள்ளப்பட்டிருப்பதற்கு காரணம், அரச ஊடகங்கள் ஆளும்தரப்பின் பிரசார இயந்திரமாக பயன்படுத்தப்பட்டிருப்பதாகும் என்றே நினைக்கிறேன்.

எமது நாட்டில் ஊடகங்களுக்கு தாக்கம் செலுத்தும் அதிகமான சட்டங்கள் நாட்டின் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக, ஊடகங்களை வரையறுக்கவே அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனை அண்மையில் சர்வதேச சஞ்சிகை ஒன்று உறுதிப்படுத்தி இருந்தது.

மேலும் 2024இல் எமது நாடு நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை அனுமதித்திருந்தது. அந்த சட்டமூலம் இணையத்தலம் மற்றும் சமூக ஊடகங்களுக்கு பெருமளவில் வரையறைகளை ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டு வந்தது. அதேபோன்று இந்த சட்டத்தை பயன்படுத்திக்கொண்டு கடந்த வருடங்களிலும் கருத்துச் சுதந்திரத்துக்கு வரையறைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த சட்டத்தை இரத்துச்செய்வதாக இந்த ஆளும்தரப்பு வாக்குறுதியளித்த போதும் தற்போது அதுதொடர்பில் ஒரு வார்த்தையும் பேசுவதில்லை.

அதேநேரம் மிகவும் கவலைக்குரிய விடயம்தான், லைன் ஏசியா அமைப்பினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சமூக ஊடகங்களில் சிங்கள மொழியில் தகவல் பெறுபவர்களில் மூன்றில் இரண்டுபேர் போலி தகவல்களுக்கு ஏமாந்து இருப்பது வெளிப்பட்டுள்ளது. இது நாட்டு மக்களுக்கு சரியான தகவல்களை பெறமுடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. இது நாட்டின் ஜனநாயகத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். அதனால் இந்த நிலைமையில் இருந்து எமதுநாட்டு மக்களை பாதுகாத்துக்கொள்வதற்காக ஊடக கல்வியில் எமது இளைஞர்கள் பிள்ளைகளை பலப்படுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் நாட்டு மக்கள் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு அவர்களுக்கு சரியான, பக்கச்சாற்பற்ற தகவல்கள் தேவையாகும். இந்த விடயத்தை சுயாதின மக்கள் சேவை ஊடக நிறுவனங்களுக்கே மேற்கொள்ள முடியும். அதற்காக அரச உரிமையுடைய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தானத்தை அரச கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து, சுயாதீன ஊடக சேவையாக மாற்றயமைக்க முடியுமாக இருந்தால் அது மிகவும் பெறுமதியாகும் என்றார்.

# புல்மோட்டை கனியமணல் கூட்டுதாபன ஊழியர்களின் சம்பளத்தை வழங்குங்கள்

## 15 மாதங்களாக அவதியுறுகிறார்கள் என உதுமா லெப்பை எம்.பி. வலியுறுத்து

இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் புல்மோட்டை நிலையத்தில் பணியாற்றும் 83 ஊழியர்களுக்கு 15 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆளும்தரப்பு உடனடியாக செயற்பட்டு, அவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு மற்றும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் புல்மோட்டை நிலையத்தில் பணியாற்றும் 83 ஊழியர்களுக்கு கடந்த 15 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் இருப்பதால் அவர்களின் வாழ்க்கை மிகுந்த சிரமத்திற்குள்ளாகி உள்ளது. 39வது நாளாக தொடர்ச்சியாக ஆரப்பாட்டம் செய்தும் சம்பளப் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காத நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கையாக சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பாக பல முறைகள் மேலதிகாரிகளுக்கும், இலங்கை கனிய பொருள் கூட்டுத்தாபனத் தலைவர், அமைச்சின் செயலாளருக்கும் முறையிட்டும் இதுவரையும் தீர்வு கிடைக்காத நிலையில் தொடர் சத்தியாக்கிரக செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். அண்மையில் நடைபெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தியிடம் ஊடகவியலாளர்கள் இது தொடர்பாக கேள்வி எழுப்பியபோது, புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் 83 பேர்களுக்கான சம்பள நிலுவையையும் அவர்களுக்கான சம்பளத்தையும் உடனடியாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

ஆனால் 83 இலங்கை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் புல்மோட்டை நிலையத்தில்பணியாற்றும்ஊழியர்களுக்கானசம்பளநிலுவை இதுவரையும் வழங்கப்படாத நிலை தொடர்கிறது. எனவே, புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் 83 ஊழியர்களின் சம்பள நிலுவையையும், சம்பளத்தையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் மேற்கொள வேண்டும்.

அதேவேளை முன்னாள் கைத்தொழில், சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன காலி மாவட்டத்தில் இருந்து 17 பேருக்கு தற்காலிக ஊழியர் நியமனங்களை 2023 டிசம்பரில் வழங்கியிருந்தார். இந்த 17 பேருக்கான சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள், விடுதிகள், இலவச மின்சார வசதிகள் மற்றும் நீர் வசதிகள் உட்பட பல வசதிகள் என்பன இன்றுவரை வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபனத்தின் 83 ஊழியர்களின் விடயத்தில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இது தொடர்பான செயற்பாடுகளின் கடிதங்களின் பிரதிகளை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன் -என்றார்.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன்
2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும்
2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி
பிரதான வீதியுடன்
0777 43 55 57







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2025இல் வெளியிடப்பெற்றது